MFN 1432

Acc.No 2756

Mamunivilanda Vilakku

(U.D.L)

ஸ்ரீ:

மாமுனிவளருள்விளக்கு.

ஆசிரியர்

காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராசாரியர்

தாரணவருஷ திருக்கார்த்திகை.

ணடெட் பிரிண்டிங் ஒர்க்ஸ், காஞ்சீபுரம்.

விலை] 30-11-44. [0-8-0.



மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

முன்னுரை.

அடியேன் செய்யும் விண்ணப்பம்.

இச்சிறுநூலுக்கு மாமுனிவனருள் விளக்கு என்று பெயரிடுகின்றேன். மணவாள மாமுனிகளின் மஹாக்ருபையை அடியேனொருவன் பெற்றிருப்பதை உலகுக்கு விளக்கிக்காட்டுவது இந்நூல். காகிதப்பஞ்சம் முதலான கஷ்டங்கள் மலிந்திருக்குமிக்காலத்தில் இந்நூல் எதற்காக? என்று அடியேனிடத்து அன்பும் பரிவுமுள்ள பெரியார்களும் சிலர் கருதக்கூடும். வாஸ்தவம். அவ்வக்காலங்களில் நடைபெறுகின்ற சில விசேஷங்கள் அப்போது எங்கும் பரவி எவர்க்கும் தெரியவரினும் சிறிது காலம் கடந்தவாறே பின்புள்ளார்க்கு உள்ளபடி தெரியாமல் மனம்போனபடி மாறுபாடாகவுரைக்க நேர்கின்றது. பழநடைவிளக்கம் முதலான சில நூல்களைப் பெரியோர்கள் எடுபடுத்தி வைத்திருந்ததனால் முற்காலத்துச் சில விசேஷங்களை இப்போதுள்ள நாமும் பின்புள்ளாரும் ஐயந்திரிபற அறிந்துகொள்ளலாகிறது. சில பல விஷயங்கள் இப்படி யெழுதிவைக்கப்படாமலே போவதனால் பின்புள்ளார் உள்ளபடி அறியப்பெறுமல் உண்மைக்குமாறுகப் பரவ நேர்கின்றது.

திருவல்லிக்கேணியில் 50, 60 வருஷங்களுக்கு முன்னே 'உடையவர்கக்ஷி—மணவாளமாமுனிகள் கக்ஷி' என்று இருபிளவு ஏற்பட்டு விசித்திரமான செயல்களும் தோன்றினவாக ப்ரஸித்தமாயுள்ளது. இது நாள்பட்ட விஷயமாகையாலே இதை உள்ளபடி தெரிவிப்பார் இப்போதில்லை. இப்பிளவு ஏற்பட்டகாலத்தில் இரண்டு வகுப்பிலும் பல

பெரியார்கள் பிரமுகர்களாக இருந்தார்களாம். இப்பிளவு ஏற்பட்டது மிகவும் அசட்டுத்தனமானது என்று இப்போது பலர் பேசிக்கொண்டாலும், நல்லதோ கெட்டதோ ஏதுவும் பகவத் ஸங்கல்பத்தினால் ஒரு காரணார்த்தமாகவே உண்டாகின்றதென்று பெரியார் கருதுகின்றார்கள். நம்மாழ்வார் திருவிருத்தத்தில் "மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி" என்றருளிச் செய்கிறார். இதனால், சிறு பிணக்கோடு பெரும் பிணக்கோடு வாசியற எப்பிணக்கும் எம்பெருமானது ஸங்கல்பத்தினாலேயே தோன்றுகின்றதென்பது தெளிவாக அறியக்கிடக்கின்றது. இங்ஙனம் பகவத் ஸங்கல்பத்தினாலேயே தோன்றின ஷை திருவல்லிக்கேணிப்பிணக்கை ஒருவரும் எழுதிவைக்காததனால், அப்பிணக்கு எக்காரணம் பற்றித் தோன்றியது? எவ்விதமாகத் தோன்றியது? அதன் பரிணாமங்கள் எப்படிப்பட்டவை? என்னும் விஷயங்களைப் பிற்காலத்தவர்கள் செவ்வனே தெரிந்துகொள்ள முடியாமலிருக்கின்றது. இப்படி மற்றும் பலபல விஷயங்களுமுண்டு.

இவையெல்லாம் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களா என்ன? நாளடைவில் மறைந்து மறந்துபோக வேண்டிய விஷயங்களல்லவோவென்று சில பெரியார்கள் நினைக்கவுங்கூடும். பகவத்கதைகளை யெழுதிவைத்த மஹரிஷிகளும் பகவத்பாகவதவிரோதிகளின் பிறப்பு வளர்ப்பு முதலிய கதைகளையும் இதிஹாஸ புராணங்களாக எழுதிவைத்தேயுள்ளார்கள். உத்தர ஸ்ரீராமாயணத்தின் பெரும்பகுதி என்னவென்று பாருங்கள். பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார் "அம்பொனெடு மணிமாடவயோத்தியெய்தி அரசெய்தி அகத்தியன்வாய்த் தான்முன் கொன்றான்தன் பெருந்தொல்கதை கேட்டு" என்றருளியுள்ளார். ராவணாதி

களின் பூருவவ்ருத்தாந்தங்களை யெல்லாம் அகஸ்த்ய மஹா முனிவர்வந்து வெகுபெரிய காரியமாக இராமபிரானுக்கு உபதேசித்தாராம். அதையும் விடாமல் வால்மீகிமாமுனிவர் ஒரு பெரியபுத்தகமாக எழுதிவைத்தார்.

இதையெல்லாம் பார்க்கும்போது, இக்காலத்துக் கதைகளும் சுருக்கமாகவாவது எடுபடுத்தப்படவேண்டுவது மிக அவசியமென்று தோன்றவேதான் அடியேன் ஆழ்வாராசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கெல்லாம் அரிய பெரிய வியாக்கியானங்களை இரவும் பகலுமெழுதிவரும் காரியங்களினிடையே இக்காரியத்தையும் சிறிதுசெய்து போருகின்றேன். இதுவும் ஒருவகையான லோகோபகாரமென்றே அடியேன் துணிபு. இதிலும் பல சாஸ்த்ரார்த்தங்கள் கிடைக்கும்.

மணவாளமாமுனிகள் அறிவிலியான அடியேனைக் கொண்டு தமக்கு ஸஹஸ்ர நாமஸ்துதியை இடுவித்துக் கொண்டதும், அதனால் அர்ச்சனையை நடத்திக்கொண்டதும், அதிலிருந்து ஒன்றிரண்டு மஹான்களுக்கு உத்வேகத்தைக் கிளப்பினதும், நாடுநகரமெங்குப்பார்த்தாலும் இதுவே ஓயாத வார்த்தையாயிருந்துவருவதும் விலக்ஷண பகவத்ஸங்கல்பமே. முதல்நாள் சாத்துமுறையன்று பேரருளாளன் மணவாளமாமுனிகள் ஸன்னிதிக்கெழுந்தருளி நடந்தேறின வைபவங்களை ஸேவித்தவர்கள் யாவரும் இது நித்ய விபூதியே யென்று சொல்லிக்கொண்டு மகிழ்ந்தார்கள். அன்னவர்கள் மறுநாள் இது லீலாவிபூதியே யென்னும்படியாயிற்று. உபயவிபூதிச் செல்வமும் எம்பெருமானுடையதேயன்றோ. ஆங்காங்குள்ள அன்பர்களும் நண்பர்களும் இதன் உபக்ரமோபஸம்ஹாரங்களை உள்ளபடி தெரிந்துகொள்ள விரும்பி அடியேனுக்கு எழுதியுள்ள கடிதங்களுக்கு அளவில்லை. அவர்களுக்கெல்லாம் தனித்

தனி விடையிறுக்க முடியாமல் இச்சிறுநூல் வாயிலாகப் பிற்காலத்தவர்கட்கும் விஷயதத்வம் விளங்குமாறு செய்து போருகின்றேன். ஏற்கெனவே வெளியிட்டுள்ள ஸாத்விக ரஸாயநப் பத்திரிகையினுல் சில விஷயங்கள் உலகுக்குத் தெரிந்தே யுள்ளன. அதுநிற்க.

வால்மீகிராமாயணத்திலில்லாத அருமையான சில விஷயங்கள் கம்பராமாயணத்திலுண்டு. யுத்தகாண்டத்தில் இராவணனுடைய மந்த்ராலோசனைச்சபை நிகழ்ச்சியைக் கம்பர் கூறுமிடத்துக் கும்பகரணனுடைய வார்த்தையாக ஒரு செய்யுள் அமைத்துள்ளார். அதாவது,

"சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டவிழ் மலர்க் குழலினளை யினி மன்ன
விட்டிடுதுமேல் எளியமாதும் அவர்வெல்லப்
பட்டிடுதுமேல் அதுவுநன்று புகழாமால்" என்பதாம்.

முத்தண்ணு! இராவணு! நீ செய்தகாரியம் அழகன்று. உயர்ந்த குலத்தில் பிறந்த நீ சிஷ்டர்கள் செய்யவேண்டிய நற்காரியங்களைச் செய்யாது குலத்திற்கு இழுக்கான தீய காரியத்தைச் செய்தது அருவருக்கத் தக்கது. ஸீதையை நீ அபஹரித்துக் கொணர்ந்தது மிகவும் கெடுதலான செயல். அச்சீதை நமக்கு வேண்டாம்; அவளை இராமனிடத்திலேயே விட்டிடுவோம் என்று இவ்வளவும் நன்மையாகச் சொல்லிவிட்டு, உடனே சொல்லுகிறுன் [**விட்டிடுதுமேல் எளியமாதும்**] அப்படி நாம் சீதையை விட்டு விடுவோமாயின் இதுநல்ல காரியமேயாயினும், நாம் இளைத்தவர்கள் என்கிற பரிபவச் சொல்லுக்கு ஆளாவோம். இச்சொல் நாம் சம்பாதிக்கத்தகாது. ஆகவே சீதையை நாம் விட்டுக்கொடுக்கவேண்டிய அவசியமில்லை. யுத்தமே ஒரு கைபார்த்துவிடுவோம்.

யுத்தத்தில் எதிரிகளால் நமக்குத் தோல்வியே நேரிடுமென்றும் நாம் மாண்டு போகவே நேருமென்றும் உண்மை தெரிந்தாலும் அதனால் பாதகமொன்றுமில்லை. மஹா புருஷர்களான அவர்களிடத்தில் நாம் பங்கமடைந்தோமாயின் இது நமக்குச் சிறந்த பெருமையேயன்றிப் பழியாகாது. நாம் இராமனோடு எதிர்த்துப் போர்புரிந்து மாண்டோமாயின் இராமனுடைய திவ்ய சரிதை இவ்வுலகில் விளங்குமளவும் நம்முடைய பெயரும் கூடவே விளங்கிவருமன்றோ? இந்தப் புகழ் நமக்கு ப்ராப்ய மன்றோ? இது எளிதில் கிடைக்கக் கூடியதா? ஆகவே எதிர்த்துப்போர்புரிவோம் என்று முடித்தான் கும்பகர்ணன்.

உண்மையாகவே *கூஜந்தம் ராம ராமேதி* என்று தொடங்கி ஸ்ரீராமாயண பாராயணம் செய்யும் போதுகளில் இராமபிரானுடைய ஞாபகம் வருதற்கு முன்னமே ராவண கும்பகர்ணாதிகளின் ஞாபகம் வந்து ஸ்ரீராம லக்ஷ்மணாதிகளின் திருநாமங்களோடொப்ப அவ்வரக்கர்களின் நாமங்களும் அடிபட்டுவருவதை இன்றளவும் காணுகின்றோம். இப்படியே இனிமேலும் காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் வேத முள்ளளவும் வேதவித்துக்களுள்ளளவும் நடந்துவருமென்பதில் ஸந்தேஹமில்லையே. இப்படிப்பட்ட புகழையன்றோ கும்பகர்ணன் விரும்பினான். இருப்பானையிலும் ஒரு பாகத்தில் அவனுக்கு இடம் கி[illegible]ட்டதன்றோ. அவனெண்ணின எண்ணம் பழு[illegible]றைவேறிவிட்டதன்றோ. அதுபோல, [illegible] வேணுமென்னும் நசையோடே நல்லகாரியம் [illegible] பெயர்களோடுகூடவே அக்காரியங்களுக்கு இடை[illegible]செய்தல், அவற்றைப் பழித்தல் முதலியன செய்[illegible]டைய பெயர்களும் நீடுழி விளங்க வேண்டியவையாதலால் அதற்குறுப்பான காரியங்கள் மிக அவசியமே.

இங்ஙனம்:
ஸ்ரீவைஷ்ணவ தாஸன்
அண்ணங்கரார்ய தாஸன்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய தாஸன் எழுதிய

மாமுனிவனருள்விளக்கு.

தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது என்று திருமழிசைப் பிரான் திருவாய் மலர்ந்தருளினபடி போது போக்கி வருமவனடியேன். இருபத்திநான்கு மணி காலத்தில் ஊணுறக்க மென்னும்படியான லௌகிக வியாபாரங்களுக்காக நாலைந்து மணி காலமே செலவிடுவேன். மற்றைக் காலமெல்லாம் அடியேனுக்கு ௸ திருமழிசைப் பிரான் பாசுரக் கணக்கிலேதான் சென்றுவருகிறது என்கிற இந்த மஹானந்தத்தை அடியேன் அடிக்கடி உபந்யாஸ கோஷ்டிகளில் சொல்லிக் கொள்வது முண்டு. அதையே இங்கும் எடுபடுத்தி வைக்கிறேன்.

உண்டியே உடையே உகந்தோடு மிம் மண்டலத்தொடுங் கூடுவதில்லை யான் என்கிற பாசுரத்தை அநுஸந்திக்கும்போது உண்மையாகஅடியேன் ஸ்ரீகுலசேகராழ்வார்க்கு இருந்த இந்த அத்யவஸாயத்தை எம்பெருமான் மிக நீசனான அடியேனுக்கும் தந்தருளினானே! இஃது என்ன பரமகிருபை! என்று உள்ளம் பூரிப்பதுண்டு. அடியேன் பிறந்தது முதலாக இன்றளவும் தேஹ யாத்திரைக்காக அணுவளவும் கரையாமல் ஆத்மயாத்திரையிலேயே

யிருந்து வருகிறேனென்பது ஆத்மஸ்துதி [தற்புகழ்ச்சி] யானாலும் இதை வெளியிட்டுக் கொள்வதில் அடியேன் கூச வேண்டிய அவசியமில்லை. தாராளமாக வெளியிடுகிறேன்.

* நீசனேன் நிறை யொன்றுமிலேன் * சீலமில்லாச் சிறிய னேலும் செய்வினையோ பெரிதால்* என்பவை முதலான பல பாசுரங்களினால் தம்முடைய நைச்சியத்தை எல்லைகடந்து பேசிக்கொண்ட நம்மாழ்வாருங்கூட, ஸமயவிசேஷங்களில் தம்முடைய ஆனந்தத்தை அபரிமிதமான செருக்குடனே அருளிச்செய்து கொண்டிருக்கவும் காணாநின்றோம். * எனக்கினியார் நிகர் நீணிலத்தே * மாறுளதோவிம்மண்ணின் மிசையே* எனக்கார் பிறர் நாயகரே * என்றிப்படி யெல்லாமன்றோ செருக்கிக் களித்துப் பேசியுள்ளார். இப்படி ஒவ்வொரு ஆழ்வார்களின் திருவாக்கிலும் பெரும்பாலும் பாசுரங்கள் அவதரித்துள்ளன.

* அமர்யாத: க்ஷுத்ர: சலமதி:......ந்ருசம்ஸ: பாபிஷ்ட: * என்று அபரிமிதமான நைச்சியத்தை யநுஸந்தித்த ஆளவந்தார் திருவாக்கிலேயே * மீமாம்ஸா சாஸ்த்ர யுக்மச்ரம விமல மநா ம்ருக்யதாம் மாத்ருசோந்ய: * என்கிற செருக்குமொழியும் வெளிவந்திருக்கிறது.

* மத்த: ப்ரத்யவர: கச்சித் நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ * என்று நைச்சியம் கூறின திருவடியின் வாக்கில் நின்றுமே * பந்நகாசநமாகாசே பதந்தம் பக்ஷிஸேவிதே, வைநதேயமஹம் சக்த: பரிகந்தும் ஸஹஸ்ரச: * என்று தோள் தட்டிச் சொன்ன வார்த்தையும் வெளிவந்துளது.

இவை யெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். நம் மணவாள மாமுனிகள் அளவுகடந்த நைச்சியத்தை யநுஸந்திப்பதற்கென்றே அவதரித்தவர். தமக்கொரு பெருமையிருப்பதாகக்

கனவிலும் நினைக்கமாட்டாத அவர்தாமும் சிலஸமயங்களில் ஆனந்தம் பொங்கித் தம்மையும் மறந்து, பகவத்கிருபை யாலும் ஆசார்யகிருபையாலும் தமக்குண்டான அதிசயங் களை வெளியிட்டுக் கொள்ளாவிடில் செய்ந்நன்றி கொன்ற பாவமாகு மென்று துணிந்து தம்முடைய போது போக் கைத் தெரிவித்தருளும் முகத்தால் தமது பெருமையைத் தாமே அருளிச் செய்துள்ளார்.

ஆர்த்திப் பிரபந்தத்தில் "பண்டு பலவாரியரும் பாரு லகோருய்யப் பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம் மைக் கண்டதெல்லா மெழுதியவை கற்றிருந்தும் பிறர்க் குக் காதலுடன் கற்பித்துங் காலத்தைக் கழித்தேன்" என் பது முதலான பாசுரங்கள் காண்க.

நன்னூல் என்கிற ஒரு பெரிய சாஸ்த்ரத்தில்,

"தன்னுடை யாற்றலுணராரிடையினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே"

என்று கூறியுள்ளது அறிஞர்கட்குத் தெரியும். அந்த வகையில் அடியேன் எவ்வளவும் தற்புகழ்ச்சி செய்து கொள்ள உரிமையுண்டு, அவசியமுண்டு. உண்மையில் இப் புகழ்ச்சியெல்லாம் என்னைச் சேராது, மணவாள மாமுனி களுக்கே சேரும். அவருடைய திருவருளையே அடியேன் அளவுகடந்து பெற்றவன். ஸத்வகுண மொன்றே வடிவெ டுத்த அவருடைய விபவத் திருமேனியை ஸாக்ஷாத்கரிக்கும் பாக்கியமும் பெற்றவனடியேன். இந்த மஹானந்தத்தை ஏற்கனவே அடியேன் சில நூல்களில் வெளியிட்டுமிருக் கிறேன். இதன் அநுபந்தமான நூல்களிலும் காணலாம்.

ஸமீபகாலத்தில் ஒருபெரியவர் அடியேனுடைய தோஷங்களைச் சரமாரியாக எடுத்துப் பொழிந்தபோது "சந்தி சாவித்ரி பண்ணாதவன்" என்று சொல்மாரி பொழிந்தார். உண்மையான விஷயத்தை அவர் கண்டறிந்து வெளியிட்டது பற்றி அடியேனுக்குண்டான ஆனந்தம் அளவிட முடியாதது. உண்மையில் அடியேன் சந்தி சாவித்ரியை விட்டுத் தொலைத்து வெகுநாளாயிற்று. முச்சந்தியும் மணவாள மாமுனிகளின் திருநாமங்களை ஜபம் செய்வதையே அடியேன் நித்ய நைமித்திக கர்மாநுஷ்டானமாகக் கொண்டவன். ஸ்ரீவசந பூஷணத்திலும் "ஜப்தவ்யம்........" இத்யாதி சூர்ணையால் காட்டினது இதுவே. "குறிகொள் அந்தணமை தன்னையொளித்திட்டேன் என்கணில்லை" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் நைச்யம் பாவித்து அருளிச் செய்ததை அடியேன் உள்ளபடி அநுஷ்டானத்தில் கொண்டவன். ஸ்ரீவரவரமுநிசதகத்திலே எறும்பியப்பா ஆச்சரியமாக ஒரு ச்லோகரத்னம் அருளிச் செய்துள்ளார். அதாவது:—

"பக்ஷ்யாபக்ஷ்யே பயவிரஹிதஸ் ஸர்வதோ பக்ஷயித்வா
ஸேவ்யாஸேவ்யௌ ஸமமநுஸ்ருதஸ் ஸேவயா தோஷயித்வா,
நித்யாநித்யே கிமபி நவிதந் கர்மணீ சாபி நித்யம்
கர்த்தும் யுக்தம் வரவரமுநே காங்க்ஷிதம் நிர்வ்யபேக்ஷம்."

என்கிறவிது ஐம்பத்தாறாவது ச்லோகம். இதன் பொருளை அடியேன் விவரிக்க வேண்டியதில்லை. இதை இதர ஸம்பிரதாயஸ்தர்கள் இகழ்வார்களெனினும் ஸ்ரீவரவர முனி பக்தர்கள் உச்சிமேல் வைத்து மெச்சுகின்றார்கள். அந்த ச்லோக ரத்னத்தில் உள்ள திடமான நம்பிக்கையினால் அதில் குறித்த காரியத்திற்காக அடியேன் கொண்டிருக்கிற நித்யாநுஷ்டானங்களெல்லாம் மணவாள மாமுனிகளின்

திருவுள்ளத்திற்கு மிகவுகப்பாயிருக்குமாதலால் அடியேனைப்பற்றின தோஷ கீர்த்தனங்கள் அத்தனையும் மாமுனிகளுக்கு முகோல்லாஸ ஹேதுவேயாய் அந்த வழியில் அடியேனுக்கும் பரமானந்த ஸந்தோஷ பீஜமென்பதில் ஸந்தேஹமில்லை.

மணவாள மாமுனிகளின் பெருமையை இடையறாது சிந்திப்ப தென்கிற ஒரு பெருந் தவத்தினால், அடியேன் அபரிமிதமான ஸித்திகளை யடைந்தவன். அவற்றில் ஒன்றை மாத்திரமே இங்கு விஜ்ஞாபிக்கிறேன். ஆனால் இது உலகமுணராததன்று. எவ்வுலகு முணர்ந்ததேயாதலால் நினைப்பூட்டுகிறேனத்தனை. ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்கெல்லாம் அவசியம் நித்யாநுபவத்திற்கு வேண்டிய நூல்கள் எவ்வளவு உள்ளனவோ அவ்வளவுக்கும் அடியேனுடைய வியாக்கியானங்களைக் கொண்டே உலகம் களிக்கும்படி மாமுனிகள் அருள் செய்துள்ளார். ஆழ்வார்களின் அருளிச்செயல்களோ, ஸகல ஆசாரியர்களும் தென்மொழியிலும் வடமொழியிலும் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளோ இவையெல்லாவற்றுக்கும் அடியேன்வாயிலாக வியாக்கியானங்களை வெளியிடுவிக்க விரும்பிய மணவாள மாமுனிகள் பரமகிருபையுடனே சிந்தை தன்னுள் நீங்காது அமர்ந்திருந்து; இதுவரையில் வெளியிடுவித்திருக்கின்ற வியாக்கியானங்கள் உலகமெங்கும் பரவியுள்ளன. தமிழ் நாட்டினர்க்கு உதவும்படி தமிழிலும், தெலுங்கு தேசத்தார்க்குத் தெலுங்கிலும், ஹிந்தீ தேசத்தவர்களுக்கு ஹிந்தியிலும் ஸம்ஸ்க்ருத வித்வான்களுக்காக ஸம்ஸ்க்ருதத்திலும் ஆக நான்கு பாஷைகளிலும் நாடோறும் க்ஷணந்தோறும் நாடு நகரமும் நன்கறிய அடியேன் தொண்டு பூண்டமுதமுண்டும் உண்பித்தும் களிப்பது மாமுனிகள் திருவருளே.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு மதுரையிலிருந்து பரமாப்தரான ஒரு அட்வகேட்ஸ்வாமி பரமப்ரீதியோடு அடியேனுக்கு ஒரு ஸ்ரீமுகம் ஸாதித்தார். அவர் அடியேனை மிக வயது சென்றவனாகக்கருதி ஷஷ்டிபூர்த்தி ஸமீபித்திருக்குமென் றெண்ணி, அந்த ஸமயத்தை முன்னமே தெரிவிக்கும்படி திருமுகமருளினர். அப்போது அந்த மஹானுக்கு அடியேன் விடுத்த பதில் விண்ணப்பம்—

"ஸ்வாமிந்! அடியேனுக்கு ஷஷ்டி பூர்த்திக்கு இன்னமும் ஏழெட்டு வருஷங்களுக்கு மேலுள்ளது. இதுவரையில் அடியேன் எழுதி வெளியிட்டிருக்கின்ற லோகோபகார க்ரந்தங்கள் 200. இவை கிடக்க. இப்போது ஒரு ஸங்கல்பம் செய்துகொண்டு தேவரீருக்கு இந்த விண்ணப்பமெழுதுகின்றேன். இன்றுமுதலாக தமிழ், ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, ஹிந்தி ஆகிய இந்நான்கு பாஷைகளிலும் உலகுக்கு மிகவுபகாரகமான நூல்களை யெழுதத் தொடங்கியிடி ஒவ்வொரு பாஷையிலும் அறுபது அறுபது க்ரந்தங்களை அடியேனெழுதி வெளியிட்டான பிறகே அடியேனுக்கு ஷஷ்டி பூர்த்தி அணித்தாகுமென்று கொள்ளக்கடவீர்" என்று.

அந்த விண்ணப்பத்தின்படியே அல்லும்பகலும் மணவாள மாமுனிகளைச் சிந்தை செய்துகொண்டே அரும்பெருங்காரியங்கள் நடத்தி வருகின்றேன். நான்கு திசைகளுக்கும் தவறாது உணவை அளித்து வருகின்றேன். காகிதப் பஞ்சம் மலிந்த இக்காலத்திலும் இக்காரியங்கள் சிறிதும் முட்டுப்படாதபடி நன்கு நிறைவேற்றிக் கொண்டு போவது எம்பெருமானன்று; நம் மணவாள முனிகளே யென்று சபதமிட்டுரைப்பேன். ஸிம்ஹ கர்ஜனையாக முழங்குவேன் இதை. இந்தச் செருக்குமொழிகளை அடி

யேன் இங்ஙனே வெளியிடாவிடில் மாமுனிகள் திறத்திலே மிகவும் க்ருதக்நனுவேன். *இமவந்தம் தொடங்கி இருங் கடலளவும்* என்று பெரியாழ்வார் அருளியபடி ஆஸேது ஹிமாசலமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களனைவர்க்கும் ஒரு நாள் தவருமல் அடியேன் அளித்துவரும் உணவு நம் மாமுனி களின் அருள்வளமே. எனது உயிர் அப்பேராசிரியருடைய திருவடிவாரத்திற் சென்று சேரும் க்ஷணம்வரையில் இத் தகைய தொண்டுகளை ஆற்றும்படி அருள் பெற்றுள்ளேன். *உலகோர் வுறங்குமே* என்று நம்மாழ்வார் கரைந்தபடி ஊணுமுறக்கமும் தவிர மற்றென்று கனவிலுமறியாதார்க்கு அடியேனெழுதுகின்றவிவ்வளவும் ஊமையரோடு செவிடர் வார்த்தையாகுமித்தனை. அதனுலென்ன?

நஹி வந்த்யா விஜாநாதி குர்வீம் ப்ரஸவ வேதநாம் என்று பண்டே சொல்லிவைத்ததுண்டே. ப்ராஹ்மண வுலகுக்கும் ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்கும் வைதிக வுலகுக்கும் அடியேன் ஒவ்வொரு க்ஷணத்திலும் க்ரந்தங்கள் மூலமாக வும் மாதாந்தப் பத்திரிகைகள் மூலமாகவும் செய்துவருகிற தொண்டுகளை ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவானமாமலை ஸ்வாமிகள் ஸ்ரீபரகால ஸ்வாமிகள் ஸ்ரீஅஹோபிலம் ஸ்வா மிகள் ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் முதலான ஸகலமடாதி பதிகளும் பரிகணிதர்களான த்ரிமதஸ்த வித்வான்களும் அபிநந்தனம் செய்து வெளியிட்டிருக்கின்ற ஸ்ரீமுகங்கள் உலகம் பரவியுள்ளன. உலகத்திலுள்ள ஸகலமடாதிபதிக ளுங்கூட ஒன்றுசேர்ந்து செய்யமுடியாத க்ரந்த ப்ரசாரங் களை அடியேன் செய்துகொண்டிருப்பதாக ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் ஸபைகள்தோறும் பேசிவருகிருர்.

இப்போது ஆஸ்தானத்தை அலங்கரித்தருளாநின்ற ஸ்ரீவானமாமலை ஸ்வாமியை இரண்டு வருஷங்களுக்குமுன்பு

அடியேன் ஸேவிக்க விடைகொண்டபோது அந்த ஸ்வாமி பரமக்ருபை பொலிய அருளிச்செய்தவார்த்தை: "அன்றே! இந்த ஆச்ரமத்தில் எனக்கு ஒரு குறையுமில்லை. உமது உபந்யாஸங்களை ஆங்காங்கு அடிக்கடி கேட்டுக் களிக்கும் பாக்கியமிருந்தது முன்பு; அதற்கு விரோதமாக இந்த ஆச்ரமம் சேர்ந்திருக்கின்றதே! என்கிற இந்த ஒரு குறை யைத்தான் நான் ஆப்தர்களிடம் சொல்லுவது." என்று.

இங்ஙனே மஹான்களின் விலையில்லாவார்த்தைகள் ஒன்றிரண்டல்ல; பல்லாயிரமுண்டு.

இனி ப்ரக்ருத விஷயத்தில் செல்லுவோம். 9-11-44ல் ஒரு கடிதம் கிடைத்தது. அதாவது—

T. E. Varadachari,
Forest Range officer Retired)

North mada street,
L. CONJEEVERAM
8—11—1944.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி ஸன்னதியில் அடியேன் தெண்டன் ஸமர்ப்பித்துச் செய்யும் விண்ணப்பம்.

.........அடியேன் தேவரிடத்தில் அபசாரப் பட்டதற்கு மனம் மிகவும் தாபமடைந்திருக்கிறது. அது சாந்திபெறவும், ப்ராரப்த மடியாக வந்த அஹங்காரம் கழியவும் தேவரீர் க்ஷமை யல்லது வேறு ப்ராயச்சித்தமில்லை என்று அறிந்து, தேவரீர் க்ஷமிக்கும் என்கிற துணிவுடன் இதை எழுதத் துணிந்தேன். க்ஷமிக்கவும்.

தி. ஈ. வரதன்.

ஆரியர்காள்! இந்த மன்னிப்புக்கடிதத்தை அடியேன் பெருமைக்காக வெளியிட்டுக் கொள்ளவில்லை. இதனால் அடியேனுக்கு யாதொரு பெருமையுமில்லை. உலகில் யாவருமறிந்த ஒரு வசனமுண்டு;—*விவாதச் ச விவாஹச் ச ஸமயோரேவ சோபதே* என்பர். விவாதமோ விவாஹமோ ஏறக்குறையஸமமானவர்களுக்கு நேருவதுதான் அழகு என்றபடி. அவருடைய வ்ருத்திகளுக்கும் அடியேனுடைய வ்ருத்திகளுக்கும் என்ன பொருத்தமுள்ளது? ஏதோ ப்ராரப்தகருமம் காரணமாக வந்த அஹங்காரத்தினால் அபசாரப் பட்டதாகவும் அதை க்ஷமிக்க வேண்டியதாகவும் அவர் ஸத்வம் தலையெடுத்துத் தெரிவிக்கிறார். அபசாரப்பட்டதனால் அடியேனுக்கு நேர்ந்த சிறுமையுமில்லை, இப்போது அவர்தாமே மன்னிப்பு வேண்டுவதனால் அடியேனுக்கு விளைவதொரு பெருமையுமில்லை. இரண்டையும் அஸத்கல்பமாக நினைத்திருப்பவனடியேன்.

வடமொழியிலும் தென்மொழியிலும் அடியேனெழுதி வெளியிட்ட நூல்களில் சிலவற்றில் மதபேதம் காரணமாகச் சில பெரிய வித்வான்கள் மறுப்புகள் எழுதி வெளியிட்டதுண்டு. அவர்களே பிறகு அநுதாபங்கொண்டு மன்னிப்புக் கடிதங்களெழுதினதுமுண்டு. திருவஹீந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியர், திருக்குடந்தை ராயம்பேட்டை (R. V.) கிருஷ்ணமாசாரியர் என்னுமிருவர்கள் மஹாமஹோபாத்யாய பட்டம் பெற்றவர்கள். பெரிய வித்வான்களாக மதிக்கப்பட்டவர்கள். அவர்கள் பல பல வருஷங்கள் விஷயசர்ச்சைகளில் போராடி நிந்தைகளையும் நிரவதிகமாகப் பொழிந்து, முடிவில் மன்னிப்புக் கடிதங்கள் எழுதிக்கொண்டதெல்லாம் ஒன்றுவிடாமல் அச்சாகி வெளிவந்திருப்பவை. அவ்விருவரும் இப்போது இவ்விபூதியில் இல்லையாயினும்,

அவர்களைப்போலவே [அவர்களுக்கும் மேலாக] பரிகளித வித்வன் மணியாகி நாளைக்கும் விளங்குகின்ற திருச்சி. ஏ. வி. கோபாலாசாரியர் M. A. B.L., ஸ்வாமிகள் அடியேனோடு இரண்டு வருஷங்கள் ஓயாதே விஷயசர்ச்சைகளைச் செய்து வேறாகப் பலவுமெழுதி பிறகு மிக்க அநுதாபங்கொண்டு மன்னிப்புக்கடித மெழுதிக்கொள்ள அதுவும் பிரசுரமாகி வெளிவந்து விளங்காநின்றது.

14—8—35ல் அந்த பிரபல அட்வகேட்ஸ்வாமி எழுதி யனுப்பிய ஸ்ரீமுகத்தில்— "அடியேன் இனிமேல் புதி தாக எந்தக்ரந்த மெழுதினாலும் அது அநுகுணமாகவே யிருக்கும். இதற்கு முன் எழுதப்பட்டு முடிந்து அச்சுக் குக் கொடுக்கப்பட்ட க்ரந்தங்களிலிருப்பதைமட்டும் க்ஷமித் துக்கொள்ளவேணும்" என்கிற வாசகங்களை யெழுதினது மாத்திரமன்றிக்கே ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி யன்று ஆயிரங்கால் மண்டபத்தில் பல்லாயிரவர்முன்பே அடியேனைத் தழுவி இதைப் பலர்க்கும் வெளியிட்டார். அடுத்தபடி ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த பெரிய ஸதஸ்ஸி லும் அவர் எழுந்தருளி மஹா கோஷ்டியில் இதை வாய் விட்டு விளம்பினார். நாளைக்கும் அவரை நேரில் கேட்கலாம்.

அவ்வளவு தூரமும் போகவேண்டா. இவ்விடத்தி லேயே நம்முடைய சமீபத்திலேயே ஸேவை ஸாதிக்கின்ற அபரதேசிகனான ஸ்ரீமத் கோழியாலம்ஸ்வாமி தாமும் தம் முடைய சிஷ்யவர்க்கங்களுமாக மூன்று நான்கு வருஷ காலம் அடியேனோடு ஓயாமல் க்ரந்தச் சண்டைகளிட்டார். முதலில் தம்முடைய திருநாமத்தினாலேயே மறுப்பு நூல் கள் அச்சிட்டு வெளியிட்டார். பிறகு என்ன காரணத்தி னாலோ தாம் மறைந்து நின்றருளி தம்முடைய சிஷ்யர்களி லும் ஆப்தர்களிலும் ஒவ்வொருவர் பெயரால் ஒவ்வொரு

மறுப்பு நூல் வெளியிடுவித்தார். எல்லாவற்றுக்கும் அடியேனொருவனே ஸமாதான க்ரந்தங்களைத் தாமதியாதே வெளியிட அவற்றைப்பெற்று முடிவில் க்ஷமைகொண்டு இப்போது பரமசாந்தியோடே ஸேவை ஸாதித்தருளாநின்றார். இதைச் சிறிது விவரிக்கவேண்டிய அவசியமுளது;

இந்த ஸ்வாமி சில வருஷங்களுக்கு முன்பு நம்பெருமாள் ஸன்னிதியில் கீழண்டைத் திருக்காவேரியருகில் அடியேனோடு ஸந்தித்து நெடும்போது வார்த்தையாடுகையில், அப்போது ப்ரஸக்தமான விவாத விஷயத்தில் மிகவும் திருக்கண்கள் சிவந்து "இந்த விஷயத்தில் க்ரந்தமூலமாக வாதிப்போம்; நான் வெற்றி பெறுவிடில் இந்த த்ரிதண்டயஜ்ஞ ஸூத்ரங்களை யறுத்தெறிந்து போடக்கடவேன்" என்று ப்ரதிஜ்ஞை செய்தருளினர். இது இன்னமும் அந்த ஸ்வாமிக்கு மறந்திராது. அப்படியே அன்றே தொடங்கி அடியேன்மீது க்ரந்தமெழுதி அச்சிட்டார். அந்த சர்ச்சைகள் சில வருஷகாலம் பிரளயமாகப் பல க்ரந்தங்களால் நடந்தன. அந்த விவாதங்களின் முடிவு என்னாயிற்றென்று அறிஞர்கள் அறிந்தேயுள்ளார்கள். முன் தடவையில் இந்த ஸ்ரீமத் ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி இவ்வூரைவிட்டு வெளியே யெழுந்தருளும்போது ஸம்ஸ்க்ருதத்தில் ச்லோகங்களாகவே ஸ்ரீமுகமெழுதி பரிசாரகர் மூலமாக அடியேனுக்கு அனுப்பியருளினர். அவரோ உத்தமாச்ரமி. எல்லாவிதத்திலும் மிகப் பெரியார். அவர்தாமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாரென்று அடியேன் வெளியிட்டால் இது அடியேனுக்கு ச்ரேயஸ்கரமன்றென்று அந்த ஸ்ரீமுகத்தை அடியேன் ஸூரக்ஷிதமாக ஆத்மாநுபவத்திலேயே இற்றைக்கும் எற்றைக்கும் வைத்துக்கொள்ளமாத்திரமே ப்ராப்தம்.

இந்தச் சிறு நூலில் இந்த யதிகளின் விஷயமாக இவ்வளவு உண்மைகளை எழுதவேண்டிய அவசியமுளதோவென்று சிலர் ஆலோசிக்கவுங் கூடும். கேண்மின். இந்நூலுக்கு மாமுனிவனருள்விளக்கு என்றன்றோ பெயர். மாமுனிகளின் திருவருளை அடியேனொருவனே அஸாதாரணமாகப்பெற்றிருப்பதாகிற பெருமையை வெளியிடுவதற்காகவேயன்றோ இந்நூல் தோன்றுகின்றது. இந்தயதிகள் மணவாளமாமுனிகளின் திருவுள்ளம் புண்படும்படியாகவே யெழுதியிருந்தவற்றை அவலீலையாக அடியேனொருவன் நிரஸித்துத் தீர்த்தது மாமுனிகளின் திருவருளினாலே யாதலால் இந்நாலுக்கு இது சிகரமான விஷயமென்றும் கொள்ளலாம்.

"மணவாளமாமுனிகளின் ஆசாரியர்கள் அஸங்கதமாக எழுதிவைத்திருந்தவைகளை அக்காலத்தில் தோன்றின ஒரு பெரியவர் கண்டித்துவிட்டாரென்றும், அதன்மேல் அன்றுமுதல் இன்றளவாக ஒருவராலும் பதில்சொல்ல முடியாமலிருக்கிறதென்றும், சதுர்முக ப்ருஹஸ்பதிகளே நேரில் வந்தாலும் சொல்ல முடியாதென்றும்" இப்படியெல்லாம் எழுதுவித்திருந்தார் இந்த யதிகள். அவ்வளவும் இவருடைய ப்ரமமேயென்று பரக்க நிரூபித்தானபின்பு அடியேனுக்கு ஸ்ரீமுகப்ரஸாதமனுப்பிவிட்டு சாந்தரானார். மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளில் லவலேசமும் ஸேவியாதவரும் ஸேவிக்கபாக்யமற்றவருமான இந்தயதிகள் இன்னமும் மாமுனிகள் பக்கலிலே காட்டுகின்ற ப்ரத்வேஷம் ஆச்ரமத்திற்கு அடியோடு தகாதது என்று விஜ்ஞாபிக்கிறேன். இப்போது இங்கு ப்ராஸங்கிகமானவிது இவ்வளவு போதும்.

இங்ஙனே பல மஹநீயர்களின் க்ஷாமண பத்ரிகைகளைப் பெற்றிருக்குமடியேனுக்கு இப்போது கிடைத்தவிந்த சிறுகடிதத்தினால் ஒரு பெருமையுமில்லை யென்பதை

யும், பெருமைக்காக இது வெளியிட்டுக் கொண்டதன்று என்பதையும் மஹான்கள் உணர்வார்கள். பின்னை யெதற்காக வெளியிட்டதென்னில்; அவர் எழுதின அக்கடிதத்தில் உள்ள வாசகங்களைக் கவனியுங்கள். "ஏதோ ப்ரக்ருதி வசாத் நேர்ந்துவிட்டது; க்ஷமிக்கவும்" என்றிவ்வளவே அவர் தமது ஸௌஜந்யத்திற்காக ஒரு வரி எழுதியிருந்தால் போதுமானது. இவ்வளவன்றி அவர் எழுதியிருக்கிற நடையை நோக்குங்கால் அது அவராக எழுதினதன்று; மாமுனிகள் ஆவேசித்து எழுதுவித்தது என்றறிந்து கொள்வதில் அருமையுண்டோ? அந்த வாசகங்களை ஊன்றிப் பாருங்கள். ப்ராரப்த கருமமடியான அஹங்காரத்தினால் அபசாரப்பட நேர்ந்ததென்கிறார். அதுவொரு பெரிய விஷயமன்று. *மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாராக்கை யென்கிற பாஞ்ச பௌதிக சரீரம் உள்ளவரையில் ப்ராரப்த கருமம் தொலையப்போகிறதில்லை, அஹங்காரமும் தவிரப் போகிறதில்லை:

இது இந்நிலத்தில் பிறந்தாரனைவர்க்கும் பெரும்பாலும் ஸமானம். *விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையுஞ் செறும் ஐம்புலனிவை மண்ணுளென்னைப்பெற்றால் என்செய்யா* என்று கலியின் தொடக்கத்திலேயே நம்மாழ்வார் அருளிச் செய்தாரென்றால் நம்போல்வாரைப் பற்றி இப்போது சொல்லவேண்டுமோ? வேண்டா;

"நான்பட்ட அபசாரத்திற்கு தேவரீருடைய
க்ஷமை தவிர வேறு ப்ராயச்சித்தமில்லை
யென்று அறிந்து"

என்று எழுதியிருக்கிறாரே, இதில் (அறிந்து) என்கிற வினையெச்சந்தான் விவேகிகளால் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

அடியேனும் அதை நோக்காமலே அக்கடிதத்தை உபேக்ஷித்திருந்தேன். அருட்கடலான மணவாளமாமுனிகள் அறிவிக்க அதனால் அறிந்து அவர் எழுதினதன்றோ அது— என்று அடியேனை அறிவிக்கப் பெற்றேன். அத்திருவருளை வெளியிட வேண்டியே அக்கடிதத்தை வெளியிட இன்றே மாமுனிகள் மதித்தருளினர். இதுநிற்க.

அக்கடிதம் கிடைத்தவுடனே அவர்க்கு மிகவிரிவான பதில் கடிதம் எழுதியனுப்பினேன். ஒரு பெரிய மனிதர் அடியேனுக்கனுப்பியிருந்த (டைப் செய்த) இங்கிலீஷ் கடிதத்தின் காபியும் அத்துடன் அவர்க்கு அனுப்பநேர்ந்தது. அதையும் அதன் மொழிபெயர்ப்பையும் ஈண்டு வெளியிட்டு, பிறகு அடியேனது பதில் கடிதத்தின் ஸாரத்தையும் வெளியிடுகிறேன். [திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸந்நிதியில் வருஷந்தோறும் 500 ரூ. கைங்கரியம் (உபயம்) நடைபெறுமாறு மூலதனம் சேமித்திருக்கிற வொரு மஹானுடைய புதல்வர் திருவாளர் M. வெங்கடகிருஷ்ணன் என்பவர் எழுதியது இந்த ஆங்கிலக் கடிதம். இதை ஒரு இங்கிலீஷ் ஜர்னலில் வெளியிட அனுப்பியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.] அக்கடிதம் வருமாறு —

WHITHER CONJEEVERAM.

On 29—10—44, I had been to Conjeeveram to worship Varadaraja. That happened to be Ekadasi day. I came to know that at about 5 in the evening there would be 'PARAPADU'. As I went there early, I sat in some corner. A few

yards off I found two Vaishnavites shouting in the most absusive language for about an hour. As I had heard about the long Thengalai Vadagalai dispute, I at first thought that it was one such. But as I listened I came to know that it was not the old maladi but a new disease—a civil dispute among the Thengalais. I came to know that the victim of their choice language was neither there, nor in the town—nay not even in the district. I could not understand why these people should abuse an absentee person and that in the most obscene language. When I enquired about this I came to know something about the truth.

On 22-10-44, the 'THIRUNAKSHATRAM' of Sri Manavala Mamuni was celebrated on a grand scale, after a break of 100 years. Next night, elated with joy, Sri. P. B. Annangarachariar performed a "Shahasra Nama Archanai" to Mana vala Mamuni. He did it for about 1 or 1½ hours. He was chanting the 'Namavali' and the Archaka was offering the Thulasi. The Archaka is the owner of the Manavala Mamuni Shrine. He did the Archana as P. B. Annangarachariar desired. The moment the Archana was over two elderly men got up and protested to Annangarachariar for what he did. The present dispute is the off-shoot.

It is strange how this small incident has developed. It seems for all this misunderstanding

there is no other reason. Nobody will think otherwise than the "Sahasranama Archanai" is a good thing. Was the Namavali on some other deity? No, No, All were unanimous that the 'Namavali' was only in praise of Sri Manavala Mamuni. I saw the same 'Namavali' printed in Telugu and Devanagiri Scripts and published. It is incomprehensible how this misunder-standing could be the off-shoot of these beautiful strotras. Let us assume then, that this Sahasranama Archanai is a bad thing. He that did this is not one who has come from the Mars; he is a friend and ally of his accusers. All agree that these were moving on good terms. Then could not have these men asked Sri P. B. Annangarachariar not to do the Archanai even when he began to do. From the beginning to the end these men were sitting there. Did they not know that it was bad if indeed it is? Or is it that they did not think so? Why the axe when they could have nipped in the bud? Why then the abuse after an hour? If in spite of protest even at the beginning and if that was brushed aside, there could then be some justification for this abuse. The 'YUDDHAKANDA' is not at the beginning of Sri Ramayana: it is only at the end: it is the climax and not the prelude. Let this pass.

But there is one important thing for all to note. P. B. Annangarachariar did not do the Ar

chanai with his own hands touching the deity. It is the Archaka who is a leader of the Thengalai community, who did the Archanai with 'Thulasi' with his own hands. P. B. Annangarachariar was only chanting the Namavali standing at a distance; he did nothing else. This chanting of Namavali, if he did even before Devarajaswami, Sri Ranganadha, Venkatachalapathi, nobody could with reason protest, much less obstruct him. Perhaps the Archaka may be asked as to why he takes part by throwing the Thulasi at the deity even as the 'Namavalai' is chanted. Even then the Archaka can be questioned if at all by his senior officer or Trustee of the temple. Let us assume that those who protested have the authority and power to question. They should have asked the Archaka to explain and that at the beginning.

It is strange how this small incident has grown beyond all proportions and is till going on the wrong track. We must be careful in finding out where the guilt lies.

We are not in the least concerned with the personal abuses. It is but human to err. The wise are greatful to those critics who point out the mistakes and drawbacks. Anyway we must find out the truth of this incident in the light of the above facts.

(sd) M. Venkatakrishnan,

ஷை இங்கிலிஷ் வியாஸத்தின் ஸாரமான கருத்து.

காஞ்சீபுரத்தின் நிலைமை.

சென்ற 29—10—44 தேதியில் நான் காஞ்சீபுரம் வரதராஜரை ஸேவிக்கவேணுமென்று போயிருந்தேன். அன்றையதினம் ஏகாதசி யுத்ஸவமாகவுமிருந்தது. ஸாயங் காலம் 5 மணிக்கு பெருமாள் புறப்பாடு ஆகுமென்று தெரிந்து நான் ஸன்னிதிக்குப்போய் புறப்பாட்டை யெதிர் பார்த்துக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன். அதே ஸமயத்தில் இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் அங்கே மிகவும் அருவருக்கத்தக்க துர்பாஷைகளான வார்த்தை களை சுமார் அரைமணிகாலம் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்தார்கள். ஷை கோவிலில் வெகுநாளாகத் தென் கலை வடகலை விவாதம் தொடர்ந்து வருகிறதென்று நான் கேட்டிருந்தபடியால் அந்த சண்டைதான் ஏதாவது கிளம் பிற்றோ என்று முதலில் நினைத்தேன். கவனித்ததில் அந்த சண்டையன்று என்றும், தென்கலைக்குள்ளேயே பிரபலமான மனஸ்தாபம் என்றும் தெரியவந்தது. அந்த சமயத்தில் எவரைக்குறித்து பிரபலமான தூஷணைகள் நடந்துகொண்டிருந்ததோ அந்த நபர் அவ்விடத்திலு மில்லை, அந்தவூரிலுமில்லை, அந்தஜில்லாவிலுமில்லையென்றும் தெரிந்தது. எதிரி இல்லாதவிடத்தில் எதுக்கு இப்படி அநா வச்யகமாக பெருமாள் ஸன்னிதி முன்னிலையில் கர்ணகடூர மான துர்ப்பாஷைகளைப் பொழிகிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை.

இவ்வளவு மனஸ்தாபத்திற்கு மூலம் என்ன என்று விசாரித்ததில், பலபேர்களாலும் உண்மை தெரியவந்தது. அதாவது—22-10-44ல் அந்த ஸன்னிதியில் மணவாளமா முனிகளின் திருநக்ஷத்ரோத்ஸவம் விசேஷவைபவமாக

நடைபெற்றது. கீழே 100 வருஷகாலம் இல்லாத ஒரு வைபவம் நடந்தேறியதாம். அந்த சந்தோஷத்தினால் P. R. அண்ணங்கராசாரியர் என்பவர் மறுநாள் இரவு 8 மணிக்கு கோஷ்டியில் ஷ மணவாளமாமுனிகளுக்கு ஒரு ஸஹஸ்ர நாமார்ச்சனை செய்துவைத்தாராம். அந்த அர்ச்சனை $1\frac{1}{2}$ மணிகாலம் நடந்ததாம். நாமாவளிகளை ஷ ஸ்வாமி சொல்லிவர, பூஜை செய்பவர் திருத்துழாய் தளங்களால் அர்ச்சனை செய்தாராம். அவர்தான் அந்த ஸன்னிதிக்கு ஸொந்தக்கரராம். அவர் இஷ்டப்பட்டு விரும்பி அந்த அர்ச்சனையை நடத்திவைத்தாராம். ஷ அர்ச்சனை முடிந்தவுடனே அவ்விடத்திலேயே இரண்டு நபர்கள் அவ்வர்ச்சனைக்காக அந்த அண்ணங்கராசாரியரை எதிர்த்துப் பேசினார்களாம். அது சம்பந்தமாகவே விவாதம் முற்றி வளர்ந்ததென்று தெரியவந்தது.

மனஸ்தாபங்கள் முற்றியிருப்பதைப்பார்த்தால் வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு மனஸ்தாபத்திற்கும் ஸஹஸ்ரநாமார்ச்சனை நடந்தது தவிர வேறு ஒரு காரணமுமில்லையென்று திண்ணமாகத் தெரிகிறது. ஸஹஸ்ரநாமார்ச்சனையென்பது புண்யகார்யமேயொழிய பாபகார்யமென்று யாரும் நினைக்க முடியாது. இதர தெய்வங்களின் நாமங்களைக் கொண்டு அர்ச்சனை நடந்துவிட்டதா என்ன? என்று கேட்டேன். இல்லையில்லை. மணவாளமாமுனிகளின் வைபவங்களைக் கொண்ட நாமாவளிகளினாலேயே அர்ச்சனை நடந்ததென்று யாவரும் சொன்னார்கள். அந்த ஸஹஸ்ரநாமம் தெலுங்குலிபியிலும் தேவநாகரிலிபியிலும் அச்சிட்டு. பிரசுரமாகியிருப்பதையும் நான்பார்த்தேன். ஆசார்யனை அழகாக ஸ்தோத்திரம் செய்ததற்காக இவ்வளவு மனஸ்தாபம் எப்படியுண்டாயிற்றென்று விளங்கவேயில்லை.

இந்த ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்யத்தகாத கெட்ட காரியம் என்றே வைத்துக் கொள்வோம். இந்த கெட்ட காரியத்தைச் செய்தவர் த்வீபாந்தரத்திலிருந்து வந்து விடவில்லை. மனஸ்தாபப்பட்டவர்களோடு ஒத்துழைக்கும் நபரே இவர். இவர்கள் ஒருவர்க்கொருவர் நேசமாகப் பேசிக் கொண்டிருந்தவர்களே யென்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அப்படியிருக்கும்போது, அர்ச்சனை ஆரம்பிக்கும் பொழுதே அந்த இரண்டு நபர்கள் அருகே வந்து 'இது நடக்கத் தகாதகாரியம், இதை நிறுத்திவிடுவதுநலம்' என்று ஹிதமாகச் சொல்லியிருக்கக் கூடாதா? அர்ச்சனை ஆரம்பித்த சமயத்தில் அந்த நபர்கள் அங்கே இல்லை என்று சொல்வதற்கும் இடமில்லாதபடி ஆரம்பம் முதல் முடிவுவரையில் அங்கேயே எதிரிலேயே உட்கார்ந்திருந்தார்களாம். இது தப்புக்காரியமென்று ஆரம்பத்திலேயே இவர்களுக்குத் தெரியவில்லையா? தோன்றவில்லையா? நகத்தால் கிள்ளவேண்டியதை கோடாலியினால் பிளப்பதுபோல் மிகவும் எளிதாக நிறுத்தக்கூடிய இந்தகாரியத்தை ஒன்றரை மணிகாலம் பொறுத்திருந்து பிறகு தூஷித்தது எதனாலே. ஆரம்பத்திலேயே நல்லதனமாகச் சொல்லியும் அவர் கேளாமல் ஜபிருதஸ்தாகவே நடத்தியிருந்தால் பிறகு எவ்வளவும் தூஷிக்கலாமே ஸ்ரீராமாயணத்தின் ஆரம்பத்திலேயே யுத்தகாண்டம் இல்லையே. முடிவிலன்றோ யுத்த காண்டமிருககிறது. இந்த விஷயம் இருக்கட்டும்.

இங்கு முக்கியமான விஷயம் எல்லாரும் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அண்ணங்கராசாரியர் மணவாள மாமுனிகள் விக்ரஹத்தை தன்கையால் தொட்டு தாமே அர்ச்சனை செய்துவிடவில்லை. அர்ச்சகர் என்று ஏற்பட்டிருக்கிற ஒரு பெரியவர் (தென்கலை லீடர்) தன்கையால் 1008

தடவை துளஸீதளங்களையிட்டு அர்ச்சனை செய்திருக்கிறார். அண்ணங்கராசாரியர் செய்த காரியம் என்ன வென்றால் தாம் தூரமாக நின்றுகொண்டு தம்வாயினால் நாமாவளிகளைச் சொல்லிக் கொண்டிருந்தது தவிர வேறொன்றும் செய்ய வில்லை. இந்த காரியத்தை இவர் தேவராஜஸ்வாமி முன்னிலை யிலும் வேங்கடாசலபதி ஸ்வாமி முன்னிலையிலும் ஸ்ரீரங்க நாதஸ்வாமிமுன்னிலையிலும் செய்தாலும்கூட இதைத்தடுக்க வாவது ஆக்ஷேபிக்கவாவது நியாயமிருப்பதாகத் தெரிய வில்லை. "அந்த நாமாவளிக்குச் சரியாக துளஸீதளங்களைப் போட்டு நீர் ஏன் அர்ச்சனை செய்தீர்?" என்று ஒருக்கால் அர்ச்சகரைக் கேட்கலாமோ என்னமோ? அப்படி கேட்க லாமானாலும் கோவிலில் அதிகாரம் செலுத்தக்கூடிய மேல திகாரிகள் கேட்கத்தக்கதாகும்.

இப்படிப்பட்ட ருஜுமார்க்கங்களுக்கு நேர்விரோதமாக மனஸ்தாபங்கள் ஏற்பட்டதும் அது அளவுமீறி வளர்ந்து கொண்டுபோவதும் ஆச்சர்யமே. இந்தவிஷயத்தில் குற்றம் எங்கே தேங்கியிருக்கிறதென்பதை புத்திமான்கள் ஆலோ சிக்க வேண்டும்.

நபர்களைப்பற்றின தூஷணைகள் நடப்பதில் நமக்கு எள்ளளவும் விசாரமில்லை. இவ்வுலகில் பிறந்த யாவருக்கும் எத்தனையோவிதமான குற்றங்கள் உண்டாவது ஸஹஜமே. குற்றங்களை யெடுத்துக் கூறுகிறவர்களிடத்திலே விவேகி கள் பெருநன்றி பாராட்டுவர்கள்.

(கையொப்பம்)

எம். வெங்கடகிருஷ்ணன்.

அடியேனெழுதிய பதில் கடிதத்தின்
ஸாராம்சமும் முடிவுரையும்.

தேவரீருடைய கடிதம் பார்த்து மிக வருந்தினேன். தேவரீர் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியம் இல்லையே. பெரியாருடைய திருவுள்ளத்தை நோவுபடுத்தினவன் அடியேன். அநுதாபம் கொள்ளவேண்டியவன் அடியேன். *மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்* என்று பராசர்வான் கூறினபடிக்கும் *நானே தானாயிடுக* என்று ஆண்டாளருளிச் செய்தபடிக்கும் குற்றம் அடியேன்பக்கலுள்ளது. உண்மையில் குங்குமம் சுமந்ததுவே அபசாரஹேதுவாயிற்று. அதைப் பொறுப்பிக்கவேண்டிய கடமை அடியேனுடையதன்றோ.

அடியேன் அபரிமிதமாகக் கற்றவன் என்கிற செருக்குடையவனே. ஆனாலும் தெரிந்துகொண்டவற்றில் சிறிதளவுகூட அனுஷ்டிக்க பாக்கியமில்லையே யென்கிற வருத்தமு முடையேன். ஸ்ரீவசநபூஷணத்தில் (3—45.) சூர்ணையின் வியாக்கியானத்தில் (ஆய்ப்படியில்) ஒரு இதிஹாஸம் காண்கிறது. அதாவது, “பட்டர் ஒருநாள் பெருமாள் ஸந்நிதியிலே அநுஸந்தானம் பண்ணாநிற்க, சிலர் செவி பொறுக்கவொண்ணாத பருஷோக்தி பண்ணக்கேட்டு, சாத்தின திருவாழி மோதிரத்தையும் திருப்பரியட்டத்தையும் கொடுத்தருளி, முகலிகளைப்பார்த்து இவர்கள் பருஷித்ததுக்கு நான் அஞ்சிக் கொடுத்தேனன்று, நாமறியாத தோஷங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தும்படி சொன்ன உபகாரத்தைப்பற்றிக் கொடுத்தேனத்தனை...... என்றருளிச் செய்தார்” என்றுள்ளது. இந்த இதிஹாஸத்தினால் தெரியவந்ததென்ன? *ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித:* என்கிற தனியனுக்கு இணங்க பட்டர்

ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதியில் பலவும் விண்ணப்பம் செய்ய நியமனம் பெற்றவராதலால் அப்படி விண்ணப்பஞ் செய்து கொண்டிருக்கையில் அது பொறாத சிலர் கர்ணகடூரமாக நிந்தித்தார்களாம். அதற்காக பட்டர் சிறிதும் திருவுள்ளம் கன்றாமல் அந்த தூஷகர்களையும் மஹோபகாரகர்களாகக் கொண்டு அவர்களுக்கு பட்டு பீதாம்பரங்களும் ஆபரணங் களும் பரிசளித்தாராம்.

இப்படியே நம்பிள்ளை விஷயத்திலும் ஒரு இதிஹாஸ முண்டு. உபதேசரத்தினமாலையில்* துன்னுபுகழ்க்கந்தாடைத் தோழப்பர்* என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் அது விசதம். அதாவது, கோயிலில் நம்பிள்ளை ஜ்ஞான ஸம்ருத் தியோடும் சிஷ்யஸம்பத்தோடும் நிகரற்று விளங்காநிற்க, அதுகண்டு ஸஹிக்கமாட்டாத முதலியாண்டான் திருப் பேரனரான கந்தாடைத் தோழப்பர் ஒருநாள் நம்பிள்ளை யைப் பெருமாள் கோஷ்டியிலே திரஸ்காரமான வார்த்தை களைச் சொல்லிப் பரிபவித்துவிட்டுத் திருமாளிகைக் கெழுந் தருளினர். அவருடைய தேவிகள் இந்த அக்ருத்யத்தை ஸன்னிதியிலே தான் நேரில் பார்த்திருந்தவளாகையாலே கண்ணுங் கண்ணீருமாக வந்து 'அந்தோ! இப்படியும் ஒரு மஹாசார்யர் திருவடிகளிலே அபசாரப்படுவீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ? என்று பலவும் சொல்லி அநுதாபத் தையுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளை திரு வடிகளிலே சென்று க்ஷமைவேண்ட வேணுமென்று பாரித் திருந்தார். அதற்குள்ளே நம்பிள்ளை தாமே தோழப்பர் திருமாளிகையேற வந்து வேரற்ற மரம்போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கன்றும்படி வர்த்தித்தவடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புக லில்லை யென்று பலவுமருளிச் செய்து தாம் க்ஷாமணம்

பண்ணிக் கொண்டாராம். அப்போது சோழப்பர் அந்த மஹா குணத்துக்கு விஸ்மயப்பட்டு "ஸ்வாமின்! தேவரீரை இத்தனைநாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்; இப்போது லோகத்துக்கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று திண்ணமாகக் கொண்டேன்" என்றாராம். அதுகாரணமாகப் பின்னை உலகாரியனென்னும் பேர் நம்பிள்ளைக் கோங்கி விலகாமல் நின்றதென்றும் மேல்.

இப்படிப்பட்ட இதிஹாஸங்களை நாம் பிறர்க்கு எடுத்துரைக்கும்போது கல்லும் கரையும்படி உரைக்கின்றோம். கேட்பவர்களும் கண்ணும் கண்ணீருமாயிருந்து புளகாங்கிதராய்க் கேட்கிறார்கள். என்ன லாபம்? இதை அணுவளவும் ஸ்வாநுஷ்டானத்தில் கொண்டுவர முடியவில்லையேயென்று உண்மையில் அடியேன் அநுதபிக்கிறேன். பட்டர் நம்பிள்ளை முதலான மஹா மஹாசார்யர்கள் எங்கே? நாயினும் கடையேனான அடியேன் எங்கே? ஆனாலும், அக்காலத்தில் அவர்கள் ப்ராக்ருதர்களிடம் திரஸ்கார மொழிகளைப் பெற்றது போல இக்காலத்தில் நாமும் பெறுகிறோம் என்று இந்த வகையினால் மாத்திரம் அவர்களோடு அடியேனை ஸாம்யம் பெறலாம் போலும். அப்படியெல்லாம் மஹா குணம் காட்டியருளின பேராசிரியர்களைப் போற்றுமவனென்று அந்தோ! அடியேன் பேர்சுமப்பது [illegible] யொழிய அந்த மஹாகுணத்தில் ஏகதேசமும் அநுஷ்டிக்கமுடியவில்லையே யென்று உள்ளுறப் பரிதாபமேயுடையேன். *வெள்கிப்போ யென்னுள்ளே நான் விலவறச் சிரித்திடுகின்றேன்.

* திகம்பரஜநே க்ராமே ஹாஸ்ய: கௌபீனவாந் நர: * [ஆடையுடாதார் நிறைந்த வூரில் ஆடையுடுப்பவன் ஏசத்தகுந்தவன்] என்கிற ஸுபாஷிதத்தை அடியேன்

நன்கு கற்றிருந்தும் அதன்படி ஆசரிக்கமாட்டாத பாவியேனுயினேன். மஹான்களின் திருவுள்ளம் கன்றும்படி கற்கவும் கற்பிக்கவும் கல்வியைப் பயன் பெறுத்தவும் எதற்காக புத்திப்ரதானம் செய்தருளினுர் மாமுனிகள்! என்று தெளியகில்லேன்.

முடிவாக ஒன்றே விஜ்ஞாபிக்கின்றேன். மணவாள மாமுனிகளைப் போற்றும் இந்த ஸம்பிரதாயத்தில் பல்லாயிரவர் மஹாபண்டிதர்களாகவும் மஹாகவிகளாகவும் தோன்றியிருக்கலாம். ஆனுலும் மாமுனிகளின் காலத்திலிருந்த சிஷ்யர்கள் வட தென் மொழிகளில் அற்புதமான துதிகளை அமைத்தார்களேயல்லது, பிற்காலத்து ஒரு வித்வானும் தன்னுடைய வாக்கை மணவாள மாமுனிகளுக்குத் தந்து ஜன்ம ஸாபல்யம் பெறவில்லை. பெற்றதாக எனக்குத்தெரியவில்லை. உடையவர்க்கு நூற்றந்தாதி யருளிச்செய்த அமுதனுர் * நினையார் பிறவியை * என்கிற பாசுரத்தில் என்ன அருளிச் செய்திருக்கிருரென்று பார்க்கவேணும். [இராமானுசனை இருங்கவிகள் புனையார்; புனையும் பெரியவர் தாள்களில் பூந் தொடையல் வனையார்] என்று வயிறெரிகிருர். ஐயோ! எம்பெருமானுரைக் குறித்துப் பிரபந்தம் பாடுவார் ஒருவருமில்லையே, தாங்கள் பாட மாட்டிற்றிலராகிலும் கவிபாடவல்லார்சிலருண்டாகில் அவர்களை ஆமோதிக்கலாமே, அதுவும் செய்யாதே அவர்களையும் பழித்துக் கொண்டு மருள் சுரந்து பிறவிக் கடலிலேயே துவள்கின்றுர்களே! என்று வயிறெரிந்துள்ளார். அந்த வயிற்றெரிச்சல் தீர அடியேனொருவனே அவ்வெம்பெருமானுருடைய புநரவதாரமான மணவாள மாமுனிகளை எவ்வுலகத்துக் கவிகளும் வியக்குமாறு ஆயிரம் சுலோகங்கள் கொண்ட இருபது ஸ்துதிகளாலே துதித்து, இன்னமும் துதிகளையியற்றிக்கொண்டு

* இல்லையெனக் கெதிரில்லை யெனக் கெதிரில்லை யெனக்கெதிரே* என்று செருக்கிக் களித்து* த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதிகனாய் விளங்காநின்றேன்.

இந்த ஸ்துதிகளெல்லாவற்றுக்கும் சேர்ந்து ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்ய மென்று அடியேன் பெயரிட்டேன். "ஸ்ரீசைலேச பாதுகாஸஹஸ்ரம்" என்று பெயரிடத் தகுமென்றார் விஜயநகரத்திலொரு மஹாபண்டிதர். ஸ்ரீசைலேசரென்று திருவாய்மொழிப்பிள்ளைக்குத் திருநாமம். அவருடைய பாதுகை—மணவாளமாமுனிகள். அவர் விஷயமான ஸஹஸ்ரம் என்றபடி.

மேற்குறித்த ஸ்துதிகளிலுள்ள சொல்லின்பம் பொருளின்பம் முதலிய பல்வகையின்பங்களையும் பக்தர்கள் நன்கு அநுபவிக்க வேணுமென்றே இவை பெரும்பாலும் தமிழுரையோடுங்கூட அச்சிடப்பட்டுள்ளன. இச்சிறு நூலோடு அநுபந்தமாகவும் அவை சேர்க்கப் படுகின்றன.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் *நீர்ப்பூ நிலப்பூ மரத்தி லொண்பூ வுண்டுகளித்துழல்வீர்...... வைகுந்தமன்னாள் குழல்வாய் விரைபோல் விண்டு கள்வாரும் மலருளவோ நும் வியலிடத்தே *என்றருளிச்செய்ததற்கு ஆழ்ந்த ஸ்வாபதேசம் கூறுமவர்கள் 'உலகில் எத்தனையோ வாக்குக்கள் தோன்றியிருக்கின்றனவே, என்னுடைய திருவாக்குப் போல எங்கேனும் நீங்கள் கண்டதுண்டோ?' என்று ஆழ்வார்தாமே சில ரஸிகர்களைக் கேட்பதாகக் கூறுவதுண்டு. அப்படி மறைத்துச் சொல்லாதே ஸுவ்யக்தமாக அடியேன் சொல்லுவதாவது- ஸ்ரீராம க்ருஷ்ணாத்யவதார விஷயமாகவும் அநேக திவ்யதேச விஷயமாகவும் மற்றும்பல ஆசார்யர்கள் விஷயமாகவும், அருளிச்செயல்களுக்கு மொழிபெயர்ப்பாகவும் அடியேன் இயற்றி வெளியிட்டுள்ள ஸ்துதிகளும் க்ருதிகளும் கிடக்கட்டும். அவைபோன்ற க்ருதிகளை இயற்றவல்ல வித்வான்கள் உலகில் பலர் இருக்கக் கூடும். கேண்மின். மாமுனிகள் விஷயமாக அடியேனியற்றி